கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 10.12.2024.  அ.வ.எண். 358/2021  வா.சா. 1.  ராஜசிம்மன், த/பெ.முத்துசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் முத்துசாமியின் மகன் என்பதை காட்டுவதற்கு வா சா ஆ 1 ஆதார் அட்டையைத் தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால்  சரிதான்.  வா சா ஆ 1 ஆதார் அட்டையைப் பெறுவதற்கு நான் தான் அதிலுள்ள விவரங்களை கூறினேன் என்றால் சரிதான்.  பிறப்புச் சான்றிதழோ அல்லது அரசாங்க ஆவணங்களோ நான் தான் முத்துசாமியின் மகன் என்பதை காட்டுவதற்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 1 ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை பரிகாரம் கோரியிருப்பது நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல.  நான் 1 ம் பிரதிவாதி முத்துசாமியுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தேன் என்பதை காட்டுவதற்கும் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 3 அயிட்ட சொத்துக்களும் முத்துசாமிக்கு தனிப்பட் ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் அதுபற்றி எனக்குதெரியாது.  நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ 8, 9, 10 செட்டில் மெண்ட் ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன்.

2) அந்த வா சா ஆ 8 முதல்  10 வரையான செட்டில்மெண்ட் ஆவணங்கள் 1 ம் பிரதிவாதி 4, 5 பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணங்கள் என்றால் சரிதான்.  தாவா 1 வது அயிட்ட சொத்துக்கள் பெரிய நெகமம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அதில் க.ச. எண். 149/3 ல் 4 ஏக்கரை 1 ம் பிரதிவாதி 16.09.1983 ல் கிரயம் பெற்றார்

ஒப்பம்/- ( ஆர், சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

என்றால் சரிதான். அந்த பூமியில் SMS கோழிப்பண்ணை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். கோழிபண்ணை கட்டுவதற்கான அனுமதி சொத்து வரி, ஆகியவை 1ம் பிரதிவாதியால் கட்டப்பட்டு வந்தது என்றால் சரிதான்.

3) க.ச. எண். 129/2 ல் 3 ஏக்கர் 9 1/2 செண்ட் 28.09.1985 தேதியில் 1ம்பிரதிவாதியின் பெயரில் கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான் . அந்த பூமியில் சூப்பர் குவாலிட்டி பைபர்ஸ் என்ற மஞ்சு மில் இயங்கி வருகிறது என்றால் சரிதான். அந்த மஞ்சுமில்லிற்கான லைசென்ஸ் 3 ம்பிரதிவாதி தமிழரசி பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்து கொண்டேகவுண்டன்பாளையத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் முத்துசாமியின் தாத்தா கருப்பே கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தை 22.08.1982 தேதியிட்ட உயில் பிரகாரம் 1ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்தார் என்றால் சரிதான், இந்த பூமியில் 1 ம் பிரதிவாதி பரணி பைபர் புராடக்ட்ஸ் நடத்தி வருகிறார் என்றால் சரிதான்.

4) 3 வது அயிட்டசொத்துக்கள் ஆவலப்பம்பட்டியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். இதில் உள்ள பூமிகள் 1 வது பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் 1 வது பிரதிவாதிக்கு சுயார்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் அதில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா சா ஆ 3 பரஸ்பர உத்தரவு விவாகரத்து மனுவானது இருவரும் சம்மதித்து விவாகரத்து செய்து கொள்ள வேண்டும் என்று பரஸ்பரத்தின் அடிப்படையில் தாக்கல்

ஒப்பம்/- ( ஆர், சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.

செய்யப்பட்ட மனு என்றால் சரிதான். மேற்படி மனுவானது 21.06.1982 ல் தாக்கல் செய்யப்பட்டு 24.01.1983 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனுவில் திருமணம் ஆகி 10 மாதங்கள் மட்டுமே ஒன்றாக வாழ்ந்து வந்ததாகவும், மனு தாக்கல் செய்வதற்கு 3 வருடங்களுக்கு முன்பிருந்தே பிரிந்துஇருப்பதாகவும் கண்டுள்ளது என்றால் எனது அம்மாவிற்கு சட்டத்தை பற்றி எதுவும் தெரியாததால் அவ்வாறு மனுவில் கையொப்பம் செய்துவிட்டார்கள்.

5) நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் எனது அம்மாவான ராதாமணியும் 1 ம் பிரதிவாதியும் 1982 ம் ஆண்டு வரை ஒன்றாக வாழ்ந்துவந்தார்கள் என்று கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. வா சா ஆ 2 ஐ யார் எனக்கு கொடுத்தது என்றால் கோமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து வாங்கினேன். வா சா ஆ 2 ஐ எந்த தேதியில் வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை. வா சா ஆ 2 ல் உள்ள சங்கதிகள் உண்மை தானா என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வா சா ஆ 2 ல் யார் எந்த தேதியில் தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு திருமணம் நடைபெறவில்லை என்றும்நான் அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. 01.11.1981 ல் 1 வது பிரதிவாதி முத்துசாமிக்கும், 3 வது பிரதிவாதி தமிழரசிக்கும் 3 வது பிரதிவாதி வீட்டில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல.

ஒப்பம்/- ( ஆர், சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

6) வா சா ஆ 2 ஆவணமானது 2, 3 பிரதிவாதிகளுக்கு திருமணம் நடந்ததாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் 1 ம் பிரதிவாதிக்கும் 3 ம் பிரதிவாதிக்கும் வழக்கு நிலுவையில் இருக்கும் போதே திருமணம் நடைபெற்று விட்டதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 1 வது பிரதிவாதிக்கும், 3 வது பிரதிவாதிக்கும் திருமணமே நடைபெறவில்லை, நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1, 3 பிரதிவாதிகளுக்கு பிறந்தவர்கள் தான் 4, 5 பிரதிவாதிகள் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் மருத்துவமனையில் பிறந்தபோது 1, 3 ம் பிரதிவாதியின் பெயர்கள் தான் பெற்றோர்கள் என்ற இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குதெரியாது.

7) 4, 5 பிரதிவாதிகள் அவர்களது பள்ளியிலும், கல்லூரியிலும் 1 வது பிரதிவாதி தான் தகப்பனார் என்ற கோதாவில் படிக்க வைத்துள்ளார் என்றால் பொய்யாக அவ்வாறு கூறியுள்ளார்கள். 4, 5 பிரதிவாதிகளின் ஆதார் அட்டை, பிறப்புச் சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், ஆகியவற்றில் 1 வது பிரதிவாதியின் பெயர் தான் தந்தை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளுக்கு 1 வது பிரதிவாதி தான் தந்தை என்ற அடிப்படையில் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. 1 வது பிரதிவாதி 4, 5 பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த வா சா ஆ 8, 9, 10 ஆவணங்கள் அடிப்படையில் 4, 5 பிரதிவாதிகளுக்கு வருவாய்துறை ஆவணங்கள் மாற்றப்பட்டுள்ளது என்றால் மோசடியாக ஆவணங்கள் தயார்செய்து அவ்வாறு

ஒப்பம்/-(ஆர்.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி

மாற்றியுள்ளார்கள். இந்த வழக்கில் 1 வது பிரதிவாதி எதிர்வாதம் எழுதிதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் என்ன எழுதி எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்என்பதை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் படித்து தெரிந்து கொண்டேன். 8) 1 ம் பிரதிவாதி அவரது விருப்பத்தின் அடிப்படையில் தான் 4, 5 பிரதிவாதிகளுக்கு வா சா ஆ 8, 9, 10 செட்டில் மெண்ட்ஆவணங்களை எழுதி வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் கட்டாயத்தின்பேரில் தான் ஆவணங்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் கடந்த 10 ஆண்டுகளாக 1 வது பிரதிவாதியின் அரவணைப்பை பெற்றேன் என்று கூறியிருப்பது வழக்கிற்காக நான் சொல்லும் பொய் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 11 வது பத்தியில் 1 வது பிரதிவாதி படுத்த படுக்கையாகிவிட்டார் அதன் பிறகே என்னை பார்க்க தொடங்கினார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார் என்றும் வழக்கிற்காக நான் அவர் படுத்த படுக்கையாகிவிட்டார் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9) 1 ம் பிரதிவாதி உடல் நிலை மோசமாக இருந்தார் என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதேனும் வைத்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் நானும், 1 ம் பிரதிவாதியும் விவசாயம் செய்து கொண்டிருந்த போது 4,5 பிரதிவாதிகள் பிரச்சனை செய்தார்கள் என்று கூறுவது பொய் என்றும்,அது போன்று ஒரு சம்பவமே

ஒப்பம்/- ( ஆர், சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி

நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 15.09.2021 ம் தேதியன்று வா சா ஆ 8 முதல் 10 வரையான ஆவணங்களின் மூலம் தாவா சொத்துக்கள் 4, 5 பிரதிவாதிகளுக்குபாத்தியப்பட்டது என்றும், அதனால் அவர்கள் பிரச்சனை செய்யவேண்டிய அவசியம்இல்லை என்றால் சரியல்ல. 15.09.2021 ம் தேதியன்று நடந்த பிரச்சனைக்கு எழுத்துமூலமான புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் குறித்து 4, 5 பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை,.

10) 10, 11 வங்கிகளில் தாவா சொத்துக்களை 4, 5 பிரதிவாதிகள் அடமானம் வைத்து கடன் பெற்று தொழில் செய்து வருகிறார்கள் என்றால் செல்லாத ஆவணங்கள் மூலம் கடன் பெற்றார்கள். 4 ம் பிரதிவாதி SMS Export நடத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 5 ம் பிரதிவாதி SMS கோழிப்பண்ணை நடத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் வா சா ஆ 8 முதல் 10 வரையான ஆவணங்களில் உள்ள சொத்து விவரத்தை தான் பார்த்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவாசொத்துக்கள் அனைத்துமே சுயார்ஜித சொத்துக்கள் என்றும் அதை 4, 5 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தது செல்லாது என்று நான் பரிகாரம் கேட்க அருகதையற்றவர் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் எவ்வித , வில்லங்கமும் , கிரயமும் ஏற்படுத்தக்கூடாது

ஒப்பம்/- ( ஆர், சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி

என்றுநிரந்தர உறுத்துககட்டளை பரிகாரம் கேட்க எனக்கு அருகதையில்லை என்றால் சரியல்ல., 1ம் பிரதிவாதிக்கு நான் சட்டப்படியான மகனே இல்லை என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல,. தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான ஒரே வாரிசு நான் மட்டும் தான். அவ்வாறு நான்சொல்வது பொய் என்றால் சரியல்ல.

<u>**2,6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) 3 வது பிரதிவாதி , 2 வது பிரதிவாதியின் மனைவி இல்லை என்றும், 1 வது பிரதிவாதியின் மனைவி என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியின் மனைவி தான், 6 ம் பிரதிவாதிதான் 2 வது பிரதிவாதியின் மனைவி என்றால் சரியல்ல,. 3 வது பிரதிவாதிதான் ஆவார். 7, 8 பிரதிவாதிகள் 2 ம் பிரதிவாதிக்கும் 6 ம் பிரதிவாதிக்கும் பிறந்த மகன், மகள் ஆவார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் 6 ம் பிரதிவாதிக்கு 2 ம் பிரதிவாதியை கேர் ஆப் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் 6ம் பிரதிவாதிதான் 2 ம் பிரதிவாதிக்கு உண்மையான மனைவி ஆவார். வழக்கிற்காக பொய்யாக கேர் ஆப் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

2) நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ 2 பெயரளவில் வழக்கிற்காக தாக்கல்

ஒப்பம்/- ( ஆர், சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி

செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அவர்களுக்குள் திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்திற்காக பொய்யாக இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- ( ஆர், சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி